தினமணி

# "விவசாயிகளுக்கு நேரடித் தகவல் அளிக்க ஸ்பெக்ட்ரம் வரியை குறைக்க வேண்டும்'

First Published : 19 Sep 2011 05:45:50 AM IST

சென்னை,செப்.18: கிராமப்புறங்களில் வாழும் விவசாயிகளுக்கு வீடியோ கான்ஃப்ரென்சிங் முறையில் நேரடியாகத் தகவல்களை பரிமாறும் வகையில் ஸ்பெக்ட்ரம் வரியைக் குறைக்க வேண்டும் என சென்னை எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் வலியுறுத்தப்பட்டது.

எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தின் சார்பாக 3ஜி தொழில்நுட்பம் மூலம் அனைத்து விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் தகவல்களை பரிமாறுவது தொடர்பான மூன்று நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில், மும்பை ஐ.ஐ.டி., நிறுவனம்,ஆஸ்திரியாவின் சர்வதேச தகவல் வடிவமைப்பு தொழில்நுட்பக் கழகம் உள்ளிட்ட நிறுவனங்கள் பங்கேற்றன.

கருத்தரங்குக்கு பின்னர் எம்.எஸ். சுவாமிநாதன், தமிழகத் தகவல் தொழில்நுட்பத்துறைச் செயலாளர் சந்தோஷ்பாபு, மும்பை ஐ.ஐ.டி. நிறுவன பேராசிரியர் கீர்த்தி திரிவேதி, ஆஸ்திரியா தகவல் வடிவமைப்பு தொழில்நுட்பக் கழகத்தின் இயக்குநர் பீட்டர் சிம்லின்கர் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

வளர்ந்து வரும் தொழில்நுட்பம் வசதிமிக்கவர்களுக்கு மட்டுமே பயன்படுமேயானால் நாட்டின் வளர்ச்சியை அது கடுமையாகப் பாதிக்கும். எளிய கிராமவாசிகளுக்கும் அந்தத் தொழில்நுட்பத்தின் பயன்கள் முழுமையாகச் சென்றடைய வேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டே, விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் எம்.எஸ்.சுவாமிநாதன் மையம் ஒலி வடிவில் தகவல்களைக் கூறி வருகிறது. இதனால், தமிழகம் முழுவதும் சுமார் 1 லட்சத்து 70 ஆயிரம் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

ஆனால், வானொலி, செய்தித்தாள்கள் போன்று இதற்கு முறையான வரையறையில்லை.எனவே, இந்தத் தகவல் பரிமாற்றத்தை வரையறுக்கும் நோக்கத்துடனும், 3ஜி தொழில்நுட்பத்தின் மூலம் அனைத்து விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு நேரடி வீடியோ தகவல் பரிமாற்றம் செய்ய எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இந்தக் கருத்தரங்கத்தில் விவாதிக்கப்பட்டன.
இது நடைமுறைக்கு வரும்பட்சத்தில், நாட்டில் உள்ள ஒவ்வொரு ஏழை விவசாயும் இதன் மூலம் பயன்பெறுவர். உதாரணமாக, பயிரைப் பாதிக்கும் பூச்சிகள் குறித்து ஒரு விவசாயி வேளாண் அலுவலரிடம் ஒலி வடிவில் தகவல் அளிப்பதைக் காட்டிலும்,அந்தப் பாதிப்பை வீடியோ மூலமாக நேரடியாகக் காட்டுவதற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன.

இந்த விஷயத்தை அடிப்படையாகக் கொண்டு, 3ஜி மூலம் நேரடி தகவல் பரிமாற்றத்தை நாடு முழுவதும் விரிவுப்படுத்தும் நடவடிக்கையில் அனைத்து துறையினரும் ஈடுபட வேண்டும். குறிப்பாக, அரசின் ஒத்துழைப்பு இதற்கு மிகவும் தேவை.

நாடு முழுவதும் இந்த முறையை செயல்படுத்த பொருளாதார ரீதியாக செலவு அதிகமாகும். முக்கியமாக, ஸ்பெக்ட்ரத்துக்கு அதிகப்படியான வரிவிதிப்பு உள்ளது. இதைக் குறைத்தால் இத்திட்டத்தை எளிதாகக் கையாளலாம் என்றனர்.

---

**ரப்பர் மரக்கன்றுகள் சேதம்: 4 பேர் மீது வழக்கு**

First Published : 18 Sep 2011 12:11:06 PM IST

களியக்காவிளை, செப். 17: களியக்காவிளை அருகே ரப்பர் மரக்கன்றுகளைச் சேதப்படுத்தியதாக 4 பேர் மீது போலீஸôர் வழக்குப் பதிந்தனர்.

களியக்காவிளை அருகேயுள்ள அதங்கோடு பகுதியைச் சேர்ந்தவர் ஸ்ரீதரன் (55). இவர் தனக்கு சொந்தமான நிலத்தில் ரப்பர் மரக்கன்றுகள் நடவு செய்திருந்தாராம். இவருக்கும் பக்கத்து நிலத்தின் உரிமையாளருக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்ததாம். இந்நிலையில் இரு நாள்களுக்கு முன்னர் ஸ்ரீதரன் நிலத்தில் பயிரிட்டிருந்த ரப்பர் மரக்கன்றுகள் சேதப்படுத்தப்பட்டிருந்ததாம்.

இதுகுறித்து ஸ்ரீதரன் அளித்த புகாரின் பேரில், களியக்காவிளை போலீஸôர் பக்கத்து நில உரிமையாளர் முத்தையன் மற்றும் டேவிட்ராஜ், ஜான், செல்லையன் ஆகிய 4 பேர் மீது வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

---

**வன உயிரின விழா போட்டிகள்**

First Published : 18 Sep 2011 10:36:38 AM IST

பொள்ளாச்சி, செப். 16: ஆனைமலை புலிகள் காப்பகத்தில் வன உயிரின விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கான பல்வேறு போட்டிகள் வரும் 25ம் தேதி தொடங்கப்பட உள்ளது.

÷இது குறித்து ஆனைமலை புலிகள் காப்பக மாவட்ட வன அலுவலர் மற்றும் துணை இயக்குநர் தியாகராஜன் வெளியிட்டுள்ள செய்தி:

÷மாவட்ட வன அலுவலர் மற்றும் துணை இயக்குநர் அலுவலகம் பொள்ளாச்சி ஆனைமலை புலிகள் காப்பகத்தில் துவங்கப்பட்டுள்ளதை முன்னிட்டு வரும் அக்டோபர் மாதம் வன உயிரின விழா கொண்டாடப்பட உள்ளது.

அதையொட்டி பொள்ளாச்சி மற்றும் வால்பாறை தாலுகா பகுதியில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு விநாடி வினா, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி, பேச்சுப் போட்டி நடைபெற உள்ளது.

÷இப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் பள்ளி மற்றும் கல்லூரிகள், மாணவர்களை தேர்வு செய்து அவர்களின் பட்டியலை வரும் 23ம் தேதிக்குள் ஸ்ரீ கிருஷ்ணா வித்யாலயா மெட்ரிக் பள்ளி, திவான்சாபுதூர், நாச்சியார் வித்தியாலயா ஜமீன் ஊத்துக்குளி, பொள்ளாச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 04259-235385, 9443913913 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

---

**நீலகிரி விவசாயிகள் கவனத்திற்கு...**

First Published : 18 Sep 2011 09:49:16 AM IST

உதகை, செப். 17:தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் உதகை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையமும், இந்திய வானிலைத் துறையும் இணைந்து நீலகிரி மாவட்டத்தில் வானிலையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படக் கூடுமென்பதால் விவசாயிகள் முன்னெச்சரிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமென எச்சரிக்கப்பட்டுள்ளது.

÷இது தொடர்பாக உதகை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத் தலைவர் என்.செல்வராஜ் விடுத்த செய்திக் குறிப்பு: காற்றில் ஈரப்பதம் 68 முதல் 94 சதம் வரை இருக்கக்கூடும் என்பதால் உருளைக்கிழங்கில் பின் கருகல் நோய் மற்றும் கூடலூர் பகுதிகளில் தேயிலையில் கொப்புள நோய் பரவுவதைக் கண்காணித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் இதுபோல ஏற்படும் பிரச்னைகளை தவிர்க்க விவசாய நிலங்களைச் சுற்றிலும் மர வகைகளை நட்டு நிலைமையை சமாளிக்கலாம்.

---

**அறிவியல் நிலையத்தில் செயல் விளக்கம்**

First Published : 18 Sep 2011 11:14:14 AM IST

நீடாமங்கலம், செப். 17: நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் இயந்திரம் மூலம் வைக்கோல் கட்டும் பயிற்சி மற்றும் செயல்விளக்கம் அண்மையில் நடைபெற்றது.

பயிற்சியை நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் தி. செங்குட்டுவன் தொடங்கி வைத்தார். வேளாண் பொறியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் அ. காமராஜ், இயந்திர பயன்பாடு பற்றி எடுத்துக் கூறினார். சேலம் ஆத்தூரிலிருந்து வந்த கர்தார் இயந்திரம் மூலம் வைக்கோல் கட்டும் கருவியின் செயல்விளக்கத்தினை திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு கருவி உரிமையாளர் அண்ணாதுரை செய்து

காட்டினார். பயிற்சியில் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகள் 25 பேர் கலந்து கொண்டனர்.

---

**மாவட்டத்தில் பலத்த மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 18 Sep 2011 02:46:26 PM IST

திருவள்ளூர், செப்.17: திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த 2 நாள்களாக பலத்த மழை பெய்து வருவதால் நெல் பயிர் செய்யும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டத்துக்கு உள்பட்ட கடம்பத்தூர், பேரம்பாக்கம், திருவள்ளூர், திருவாலங்காடு, திருத்தணி, பள்ளிப்பட்டு, ஆர்.கே. பேட்டை, ஊத்துக்கோட்டை, பெரியபாளையம் உள்ளிட்ட சுற்றியுற்ற பகுதிகளில் பரவலாக நெல் பயிர் விவசாயம் அதிக அளவில் நடைபெற்று வருகிறது.
கடந்த 2 மாதங்களுக்கு முன் அறுவடை செய்த விவசாயிகள் தற்போது நாற்று நட்டு நெல் பயிரிட துவங்கியுள்ளனர். இந்நிலையில் திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த 2 நாள்களாக மாலை மற்றும் இரவு நேரங்களில் பலத்த மழை பெய்து வருகிறது.

இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் இதுபோல் தொடர்ந்து மழை பெய்தால் ஏரிகளிலும் நீர்மட்டம் உயரும், நிலத்தடி நீர்மட்டமும் உயர்ந்து விவசாயப் பயன்பாட்டுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என அவர்கள் தெரிவித்தனர்.

நகர மக்கள் அவதி: திருவள்ளூர் நகரின் பல பகுதிகளில் பாதாள சாக்கடைப் பணிகள் முடிவடைந்த இடங்களில் இதுவரை சாலைகள் அமைக்கப்படாமல் உள்ளன. அந்த பகுதிகளில் பள்ளம், மேடு எது என தெரியாமல் வாகனங்களில் செல்வோர் அவதிப்படுகின்றனர்.
குறிப்பாக ராஜாஜிபுரம், பூங்காநகர், பெரியகுப்பம், லட்சுமிபுரம், காந்திபுரம் உள்ளிட்ட பகுதி மக்கள் நடக்கவே முடியாமல் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.
மாவட்டத்தில் மழை அளவு (மில்லி மீட்டரில்): பொன்னேரி 11.20, ஊத்துக்கோட்டை 1, கும்மிடிóபபூண்டி 11, திருத்தணி 10, திருவள்ளூர் 57, பூந்தமல்லி 54, பூண்டி 3.40,

செம்பரம்பாக்கம் 60, சோழவரம் 15, தாமரைப்பாக்கம் 13, ஆர்கே.பேட்டை 15, செங்குன்றம் 42.

---

தினமலர்

**தேயிலை தோட்டங்களின் பரப்பளவு சுருங்குது :தேயிலை வாரிய அதிகாரி வருத்தம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 18,2011,23:01 IST

குன்னூர் : "நீலகிரியில், தேயிலை தோட்டங்களின் பரப்பளவு சுருங்கி வருகிறது; தோட்டங்களை ரியல் எஸ்டேட் வியாபாரத்துக்கு பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்' என, தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தோட்ட அதிபர்கள் சங்கத்தின் 58வது ஆண்டு விழா, நேற்று முன்தினம் குன்னூர் உபாசி அரங்கில் நடந்தது; தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் பேசியதாவது: இந்தியாவில் 40 லட்சம் விவசாயிகள் தேயிலை தொழிலை சார்ந்துள்ளனர்; நிரந்தர வருமானம் தரும் தொழிலாக தேயிலை விவசாயம் உள்ளது. புவி வெப்பமடைதல், காலநிலை மாற்றத்தால், புதிதாக தேயிலை சாகுபடி மேற்கொள்ள முடியாத சூழ்நிலை உள்ளது. தொழிலாளர் பற்றாக்குறை, எரிபொருள் தட்டுப்பாடு, உற்பத்தி செலவு உட்பட பல சிக்கல்களை, தோட்ட தொழிலதிபர்கள் எதிர்கொண்டு வருகின்றனர். விவசாய நிலமாக உள்ள தேயிலை தோட்டங்களை, ரியல் எஸ்டேட் வணிகத்துக்கு பயன்படுத்தக் கூடாது; தேயிலை தோட்டங்களில் தேயிலை சாகுபடி மட்டுமே மேற்கொள்ள வேண்டும். நீலகிரியில், தேயிலை தோட்டங்களின் பரப்பளவு சுருங்கி வருகிறது. 1998ல், கம்பெனி தேயிலை தோட்டங்களின் பரப்பளவு, 17 ஆயிரத்து 466 எக்டேராக இருந்தது; தற்போது, 13 ஆயிரத்து 820 எக்டேராக குறைந்துள்ளது. குன்னூர் தாலுகாவில், 1998ல், 4,522 எக்டேராக இருந்த கம்பெனி தேயிலை தோட்டங்களின் பரப்பளவு, தற்போது 2,347 எக்டேராக குறைந்துள்ளது. எனவே, தேயிலை சாகுபடியின் பரப்பளவை அதிகப்படுத்த வேண்டும். தேயிலை தொழிற்சாலைகளில் எரிபொருள் செலவு அதிகரிப்பதால், ஐ.நா., சபை உதவியுடன், எரிபொருள் சிக்கன நடைமுறை திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. தென்னிந்திய தேயிலை தொழிலதிபர்களுக்கு உதவும் வகையில், சிறப்பு தேயிலை மேம்பாட்டு நிதி

அளிக்க, தேயிலை வாரியம் முன்வந்துள்ளது; உதவி பெற, கடந்த 7 ஆண்டுகளில் தங்கள் தோட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களின் விபரங்களை, உரிய விண்ணப்பத்தில் பூர்த்தி செய்து தேயிலை வாரியத்துக்கு அனுப்ப வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது; 50 சதவீத தேயிலை தொழிற்சாலைகள் மட்டுமே விண்ணப்பம் வழங்கியுள்ளன; தொழிற்சாலைகளின் ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே, மேம்பாட்டு பணிகளை தொடர முடியும். இவ்வாறு, அம்பலவாணன் பேசினார்.

---

**காளான் தயாரித்தால் நல்ல லாபம் ஈட்டமுடியும் மகளிர் தொழில் முனைவோர் கருத்தரங்கில் தகவல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 19,2011,00:20 IST

திருச்சி: ""தேவையை விட உற்பத்தி மிகக்குறைவாக இருப்பதால், காளான் தயாரிப்பில் ஈடுபடுபவர்கள் நல்ல லாபம் ஈட்ட முடியும்," என காளான் வளர்ப்பு குறித்து விரிவுரையாளர் விஜயகுமார் பேசினார். தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் சங்கம் சார்பில், மகளிர் தொழில் முனைவோருக்கான ஒருநாள் கருத்தரங்கு டிட்டிசியா அலுவலகத்தில் நடந்துது. பாரதிதாசன் பல்கலை மகளிரியல் துறை இயக்குனர் மணிமேகலை தலைமை வகித்து பேசியதாவது: பெண்கள் இன்று ஏராளமான தொழில் துறையில் சிறந்து விளங்குகின்றனர். ஆனால், அவர்கள் அமைப்புசாரா தொழிலாளராக அங்கீகரிக்கப்படவில்லை. முறையாக வருமானவரி "ரிட்டன்ஸ்' தாக்கல் செய்து தங்களுக்கான அங்கீகாரத்தை நிலைப்படுத்த வேண்டும். பெண் என்ற குறுகிய வட்டத்துக்குள் நாம் இருக்கக்கூடாது. இந்திராணி என்ற பெண் ஒருவர் வர்த்தக ரீதியான டிரைவராக செயல்பட்டு வருகிறார். அவர் "கால் டாக்ஸி' ஓட்டுகிறார். அவர் படும் இன்னல்கள் கொஞ்சம் நஞ்சமல்ல. அவரது தைரியத்தை நாம் பாராட்ட வேண்டும். செப்டம்பர் 15ம் தேதி திருச்சி, வேலூர், கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்டங்களில் மகளிர் சுகாதார மேம்பாட்டுக்காக இலவச நாப்கின் வழங்கும் திட்டத்தை தமிழக முதல்வர் துவங்கி வைக்க உள்ளார். தொடர்ந்து படிப்படியாக அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் துவங்கப்பட உள்ளது. இதற்காக அரசுக்கு நாப்கின் தயாரித்து வழங்க நாம் அனுமதி கோரியுள்ளோம். இதனால், பெண்களுக்கு கூடுதல் தொழில்வாய்ப்பு ஏற்படும். நாம் தயாரிக்கும் "நாப்கின்'களுக்கு 1.35 ரூபாய்

வழங்கப்படுவதாக கூறியுள்ளனர். மாதவிடாய் சுகாதார கூட்டமைப்பு மூலம் அதை 2.50 ரூபாயாக உயர்த்திதரக் கோரியுள்ளோம். இவ்வாறு அவர் பேசினார்.சகாளான் வளர்ப்பும், சந்தைப் படுத்துதலும் குறித்து எம்.ஐ.இ.டி., விரிவுரையாளர் விஜயகுமார் பேசியதாவது: எதிர்காலத்தில் விவசாயம் (ஆக்ரோ) சார்ந்த தயாரிப்புகளுக்கு நல்ல மவுசு உள்ளது. வேளான் சார்ந்த காளான் வளர்ப்பில் நல்ல லாபம் உள்ளது.

காளானில் 1500 வகை உள்ளது. இதில், இந்தியாவில் 50 வகையான காளான்களும், தமிழகத்தில் நான்கு வகையான காளான்கள் மட்டும் தான் வளர்க்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. மொட்டு (ஊட்டி), சிப்பி, பால் ஆகிய மூன்று வகை காளான் தான் இன்று விற்பனையில் உள்ளது. இதில், எந்த வகை பருவத்திலும் வளரக்கூடிய பால் காளான் தான் நல்ல லாபம் தரும். திருச்சியை பொறுத்தவரை பால் காளான் வளர்ப்பு மிகச்சிறந்தது. ஊட்டி காளான் வளர்க்க அதிக செலவாகும். சிப்பிக்கலான் வளர்க்க அதிக பராமரிப்பு தேவைப்படும். ஒரு கிலோ பால் காளான் 110 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

ஆடு, கோழி, மீன் போன்ற இறைச்சிகளுக்கு இணையான புரோட்டின் மற்றும் இதர சத்துக்கள் காளானில் கிடைக்கிறது. அசைவம் சாப்பிடாதவர்கள் காளான் சாப்பிடுகின்றனர். எனவே, காளானுக்கு மவுசு அதிகரித்து வருகிறது. தமிழகத்தில் மொத்தம் 130 கிலோ மட்டுமே காளான் நாள்தோறும் உற்பத்தி செய்யப்படுகிறது. தேவையை விட உற்பத்தி மிகக்குறைவாகவே உள்ளது. மதிப்புக்கூட்டப்பட்ட காளான் பொருட்களுக்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி உள்ளது. வீட்டில் இருக்கும் பெண்கள் காளான் வளர்ப்பில் நிச்சயம் வெற்றி பெறலாம். இவ்வாறு அவர் பேசினார். கோல்டு கவரிங் நகை தயாரிப்பு குறித்து ராஜேந்திரன், வாழைநாரில் கைவினைப் பொருட்கள் தயாரிப்பது குறித்து அனிதா ஆகியோர் பேசினர். தமிழ்நாடு தொழில் முனைவோர் சங்க செயலாளர் திலகவதி நன்றி கூறினார்.

---

**பருவ மழையை நம்பி பணிகளை துவக்கிய விவசாயிகள் : பொட்டாஷ் உரமின்றி அவதி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 19,2011,00:56 IST

திருப்பரங்குன்றம் : திருப்பரங்குன்றம், அவனியாபுரம் பகுதிகளில் பருவமழை மற்றும் வைகை அணை தண்ணீரை நம்பி விவசாய பணிகளை துவக்கிய விவசாயிகள், பொட்டாஷ் உரம் கிடைக்காமல் அவதியுறுகின்றனர். இப்பகுதிகளில் 7 ஆயிரம் ஏக்கரில் கடந்தாண்டு நெல் சாகுபடி செய்யப்பட்டது. சில நாட்களாக பெய்யும், மழையை நம்பி ஆர்வமுடன் திருப்பரங்குன்றம், அவனியாபுரம், வடபழஞ்சி, தென்பழஞ்சி, கரப்பட்டி, வேடர்புளியங்குளம் பகுதிகளில் 200 ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி முறையிலும், மற்றவர்கள் சாதாரண முறையிலும் நெல் பயிரிட ஆயத்த பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதி வேளாண் அலுவலகங்களில் 30 டன்னுக்கும் மேற்பட்ட, விதை நெல் விற்பனை செய்யப்பட்டுள்ளது. பொட்டாஷ் உரத்திற்கு தட்டுபாடு நிலவுகிறது.

தென்பழஞ்சி விவசாயி சிவராமன் கூறுகையில், ""பருவமழை துவங்கிய நிலையில், வைகை அணையிலிருந்தும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இது ஒரு போக விவசாயத்திற்கு போதும். சென்றாண்டு பெய்த கன மழையால், மானாவாரி பகுதி நீர்நிலைகள், 42 ஆண்டுக்குப்பின் நிரம்பியதால், நிலத்தடிநீர் மட்டம் உயர்ந்துள்ளது. தொடர்ந்து மழை பெய்தால், மானாவாரி பகுதிகளிலும் 2 போகம் நெல் விளைவிக்க முடியும். பொட்டாஷ் உரம் கிடைக்கவில்லை. உரம் கிடைக்கவும், தற்போது விவசாயத்திற்கு இரவு நேரத்தில் 8 மணிநேரமும், பகல் நேரத்தில் 6 மணிநேரமும் மின்சாரம் வழங்கப்படுகிறது. அதை பகலில் 10 மணிநேரம், இரவில் 6 மணிநேரமாக மாற்ற வேண்டும். திருந்திய நெல் சாகுபடி முறையில், மெஷின் நடவுக்கு ஏக்கருக்கு ரூ. 3,500 கொடுக்கிறோம். வேளாண் துறை மூலம் அரசு மெஷினை கொடுத்து, குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு கொடுக்கலாம், என்றார்.

---

**சின்ன வெங்காயம் ஏற்றுமதிக்கு தடைதமிழக கள் இயக்கம் கண்டனம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 19,2011,01:25 IST

ஈரோடு: "மத்திய அரசு சின்ன வெங்காயம் ஏற்றுமதிக்கு விதித்திருக்கும் தடை விவசாய விரோதப்போக்கு' என, தமிழ்நாடு கள் இயக்க கள ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி தெரிவித்துள்ளார்.இதுபற்றி, அவர் விடுத்துள்ள அறிக்கை: உலக அளவில் பயன்படுத்தப்படும் உணவு பண்டம் வெங்காயம். பொதுவாக வெங்காயத்தில் பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம் என்று இரண்டு ரகங்கள் உண்டு. சிறிய வெங்காயம் தமிழகத்தில் மட்டுமே விளைவிக்கப்படுகிறது. அதன் பயன்பாடு தமிழகத்திலும், தமிழர்கள் வாழும் பிற நாடுகளிலும் உள்ளது. பொதுவாக பெரிய வெங்காயமே அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. விலையில் அடிக்கடி ஏற்றம், இறக்கம் காணப்படும். கிலோ ஐந்து ரூபாய்க்கும் விற்கும். 50 ரூபாய்க்கும் விற்கும். அதிக நாட்கள் இருப்பு வைத்து விற்க முடியாத பண்டம். அழுகிப் போகக்கூடியது. வெங்காய ஏற்றுமதிக்கு தற்போது மத்திய அரசு தடை விதித்துள்ளது. இது விவசாய விரோதப்போக்கு. அதனால், ஏற்றுமதி நிறுத்தப்பட்டுள்ளது. சிங்கப்பூர், மலேசியா, குவைத் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாக இருந்த சின்ன வெங்காயம் திருச்சி விமான நிலையத்தில் கேட்பாரற்று கிடக்கிறது.

உள்நாட்டில் தற்போது வெங்காய விலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. அதனால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.தமிழகத்தில் மட்டுமே விளையும் சின்ன வெங்காயத்துக்கு தடை என்பது கூடாது. இந்த தடையால் தமிழக விவசாயிகள், வெளிநாடு வாழ் தமிழர்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.தாராபுரம், பல்லடம், பொங்கலூர், குண்டடம் ஆகிய இடங்களில் சேமித்து வைக்கப்பட்டுள்ள சின்ன வெங்காயம் விரைவில் அழுகிப் போகும் அபாயம் உள்ளது. மத்திய அரசு வெங்காயத்துக்கான ஏற்றுமதி தடையை உடனடியாக நீக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

---

**மஞ்சள் விலை சரிவுவிவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 19,2011,02:02 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 1,500 மூட்டை மஞ்சள், 40 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. தொடர்ந்து மஞ்சள் விலை சரிவை நோக்கிச் செல்வதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் தனியார் கமிஷன் மண்டிகளில், சனிக்கிழமைதோறும் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது.நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சமாக, 3,399 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 5,333 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சமாக, 2,669 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 4,289 ரூபாய்க்கும் விற்பனையானது.ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு, 555 ரூபாய், உருண்டை மஞ்சள், 300 ரூபாய் விலை குறைந்துள்ளது. ஆத்தூர் அதன் சுற்றுவட்டார கிராம பகுதி மற்றும் வெளி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்த, 1,500 மூட்டை மஞ்சள், 40 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. தொடர்ந்து மஞ்சள் விலை சரிவை நோக்கிச் செல்வதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

---

**விவசாயிகள் விதை பரிசோதனை செய்ய அழைப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 19,2011,00:28 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட விவசாயிகள் விதையின் முளைப்பு திறனை அறிய விதை பரிசோதனை செய்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. "விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கு ஏற்ப தரமான விதை உற்பத்தி செய்ய விதை உற்பத்தியாளர்கள் பயிர் விளைச்சலுக்கு தேவையான தொழில் நுட்பங்களை நல்ல முறையில் கடைபிடிக்க வேண்டும். தரமான விதை என்பது சான்று பெற்ற விதைகளாகும். அதாவது அவை குறிப்பிட்ட தர நிர்ணயித்துக்குள் புறத்தூய்மை, ஈரப்பதம் முளைப்பு திறன் மற்றும் பிற ரக கலப்பு ஆகியவற்றை கொண்டதாகும். உற்பத்தி செய்த விதைக்கு விதைசான்று பெறுவதற்கு விதையை சேமிப்பதற்கும்

ஈரப்பதம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஒவ்வொரு பயிர் விதைக்கும் விதையில் அதிகபட்ச குறிப்பிட்ட ஈரப்பதம் மட்டும் இருக்கலாம். உததாரணத்துக்கு நெல்லுக்கு 13 சதவீதம், சிறு தானியத்துக்கு 12 சதவீதம், பருப்பு வகை பயிர் மற்றும் எண்ணெய் வித்து பயிர் விதைகளுக்கு 9 சதவீதம் மட்டுமே இருக்கலாம். இவ்வாறு அதிக பட்ச ஈரப்பதும் ஒவ்வொரு பயிருக்கும் மாறுபடும். சேமிக்கும் விதையில் குறிப்பிட்ட அளவு ஈரப்பத்துக்கு மேல் இருந்தால், விதை சேமிப்பின் போது, பூச்சி நோய் தாக்குதல் ஏற்பட்டு, விதையின் முளைப்புத்திறன் பாதிக்கப்படும். முளைப்பு திறன் பாதிக்கப்பட்டால் அந்த விதை விதைப்தற்கு ஏற்றதாக இருக்காது. அதனால், விதையின் முளைப்பு திறனை பாதுகாக்க விதையின் ஈரத்தன்மை அறிந்து விதைகளை தேவையான ஈரத்தன்மைக்கு கொண்டு வந்து சேமித்தால் விதைகள் நீண்ட நாட்களுக்கு சேமித்து வைக்க முடிகிறது. இத்தரத்தை நிர்ணயம் செய்வதில் விதை பரிசோதனை நிலையம் முக்கிய பங்கு வகிக்கிறது. விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் தங்களிடம் உள்ள விதையின் ஈரப்பதம் அறிந்து கொள்ள விதை குவியலில் இருந்து 100 கிராம விதை மாதிரி எடுத்து காற்றுபுகாத பாலித்தீன் பைகளில் அடைத்து, பயிர், ரகம், குவியல் எண் ஆகியவற்றை குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். முளைப்பு திறன் மற்றும் புறத்தூய்மை ஆகிய விதை தரங்களை அறிந்து கொள்ள வேண்டியிருப்பின் தேவையான அளவு விதை மாதிரி எடுத்து ஈரப்பதம் அறிய வேண்டிய விதை மாதிரியுடன் இன்னொரு பையிலிட்டு பயிர், ரகம், குவியல் எண் ஆகியவற்றை குறிப்பிட்டு முகப்பு கடித்துடன் ஒரு மாதிரிக்கு 30 ரூபாய் வீதம் கட்டணத்துடன் நேரில் அல்லது தாபல் மூலம் அனுப்பி வைத்தால், விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு முடிவுகள் உங்கள் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். விதை மாதிரிகளை, "விதை பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், கலெக்டர் அலுவல வளாகம், தர்மபுரி' என்ற முகவரியில் நேரில் அல்லது தபால் மூலம் அனுப்பி வைக்கலாம்.


இத்தகவலை தர்மபுரி விதை பரிசோதனை அலுவலர் கமலா தெரிவித்தார்.

---

தினகரன்

**தானியம், சமையல் எண்ணெய் இறக்குமதி 35 சதவீதம் உயர்வு**

பதிவு செய்த நாள் : 9/19/2011 0:46:29



புதுடெல்லி: கடந்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலத்தில் தானியங்கள் மற்றும் சமையல் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களின் இறக்குமதி 34.5 சதவீதம் அதிகரித்து ரூ.21,537 கோடியாகி உள்ளது. இது கடந்த ஆண்டின் இதே காலத்தில் ரூ.16,016 கோடியாக இருந்தது. நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் தானிய ஏற்றுமதி 27.2 சதவீதம் அதிகரித்து ரூ.2,016 கோடியானது. கடந்த ஆண்டில் இது ரூ.1,585 கோடியாக இருந்தது. சமையல் எண்ணெய் இறக்குமதி 51 சதவீதம் அதிகரித்து ரூ.9,145 கோடியானது. கடந்த ஆண்டில் இது ரூ.6,055 கோடியாக இருந்தது. சமையல் எண்ணெய் இறக்குமதி செய்வதில் உலகிலேயே இந்தியா முதலிடத்தில் உள்ளது.

---

**வேப்பனஹள்ளி பகுதியில் நிலக்கடலை அறுவடை ஆரம்பம்**

பதிவு செய்த நாள் 9/19/2011 9:40:46

வேப்பனஹள்ளி: வேப்பனஹள்ளி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் நிலக்கடலை அறுவடையை விவசாயிகள் துவக்கி உள்ளனர்.
கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனஹள்ளி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் விவசாயிகள் அதிகளவில் நிலக்கடலை பயிரிட்டுள்ளனர். தற்போது மழை பெய்து வருவதால் நிலத்தின் இறுக்கம் தளர்ந்து இலகுவாகி உள்ளது. இதனால், நிலக்கடலை

பயிரிட்டுள்ள விவசாயிகள் தற்போது அறுவடையை துவக்கி உள்ளனர். இதன் காரணமாக கிருஷ்ணகிரி மண்டிகளுக்கு நிலக்கடலை வரத்து அதிகரித்துள்ளது. தற்போது அறுபது கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை ஆயிரத்து ஐம்பது ரூபாய் வரை விலை போகிறது. இதுபற்றி வேப்பனஹள்ளி அருகேயுள்ள அத்திகுண்டா கிராமத்தில் நிலக்கடலை பயிரிட்டுள்ள விவசாயி சீனிவாச கவுடு கூறும்போது, போதியளவு மழை இல்லாததால் சரியாக செடிகளில் காய்கள் பிடிக்கவில்லை, காட்டுப்பன்றிகளின் தொல்லையால் பயிர்கள் நாசமாகி விட்டன. இதனால் நிலக்கடலை சாகுபடியில் லாபம் ஈட்ட முடியவில்லை என்றார்.

---

**விவசாயிகளுடன் கலந்துரையாடல்**

பதிவு செய்த நாள் 9/19/2011 9:25:37

சின்னமனூர்:சின்னமனூர் அருகே ஊத்துப்பட்டியில் பாரத மாதா தொண்டு நிறுவனம் சார் பில் உழவர் மன்ற விவசாயிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. தொண்டு நிறுவன இயக்குனர் கிருஷ்ணன் தலைமை வகித்தார். உழ வர் மன்ற பொறுப்பாளர் மணிகண்டன் வரவேற் றார். நோய் தாக்குதலில் இருந்து வாழை, தென்னை, திராட்சை, காய்கறி வகைகள் போன்றவற்றை பாதுகாப்பது குறித் தும், இயற்கை உரங்களை பின்பற்றுவது குறித்தும் விவசாய ஆலோசகர் சவரிராஜ் விளக்கினார். உழவர் மன்ற விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

தினத் தந்தி
DAILY THANTHI

**வேலூர் மாவட்டத்தில்**
**4 லட்சம் பேருக்கு, உழவர் பாதுகா பு திட்ட அடையாள அட்டை**
**தனி தாசில்தார்கள், கிராம நிர்வாக அதிகாரிகள் மூலம் வழங்க படுகிறது**

வேலூர், செ .19–

வேலூர் மாவட்டத்தில் 4 லட்சத்துக்கு 610 பேருக்கு உழவர் பாதுகா பு திட்டத்துக்கான அடையாள அட்டை வழங்க படுகிறது. இதற்கான டோக்கன் வழங்கும் பணி நடந்து வருகிறது.

உழவர் பாதுகா பு திட்டம்

விவசாயிகளுக்கான புதிய உழவர் பாதுகா பு திட்டத்தை முதல்–அமைச்சர் ஜெயலலிதா சட்டசபையில் அறிவித்தார். அதன்படி இந்த திட்டத்தின் கீழ், 2.5 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலம் அல்லது 5 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலம் முதலியவற்றை உடைமையாக கொ  டு, அந்த நிலத்தில் நேரடியாக பயிர் செய் ம், 18 வயது முதல் 65 வயதிற்கு உட்பட்ட குறு மற்றும் சிறு விவசாயிகள் மற்றும் விவசாயம் சார்ந்த தொழிலில் ஊதியத்திற்காகவோ அல்லது குத்தகை அடி படையிலோ ஈடுபட்டுள்ள 18 முதல் 65 வயது வரை உள்ள அனைத்து விவசாய குத்தகைதாரர்கள், தொழிலாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்து வாழும் குடும்ப உறு பினர்கள் ஆகியோர் பயன்அடைவார்கள்.

இதுவரை குடும்ப தலைவருக்கு மட்டுமே அடையாள அட்டை வழங்க பட்டு வந்த நிலை மாறி இந்த புதிய உழவர் பாதுகா பு திட்டத்தில் குடும்ப உறு பினர் ஒவ்வொருவருக்கும் அடையாள அட்டை வழங்க படுவதால், எவ்வித விடுபடுதலும் இன்றி, குடும்ப உறு பினர்கள் அனைவரும் திட்ட உதவிகளை பெற வழிவகை ஏற்படும்.

கல்வி உதவி

விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் குடும்ப உறு பினர்கள் கல்லூரி கல்வி உள்ளிட்ட உயர்கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில், இவர்கள் வேறு எந்த கல்வி உதவி திட்டத்தின் கீழ் உதவி பெற்றாலும், இந்த திட்டத்தின் கீழும் கல்வி உதவித்தொகை பெறுவதற்கு வழி வகை செய்ய பட்டு உள்ளது. வேறு திட்டங்களின் கீழ் கல்வி உதவித்தொகை பெற்றாலும், இந்த திட்டத்திலும் கல்வி உதவித்தொகை

பெறலாம்.

இந்த திட்டத்தின் கீழ் திருமண உதவித்தொகையாக, ஆணுக்கு ரூ.8 ஆயிரமும், பெ ணுக்கு ரூ.10 ஆயிரமும் வழங்க படுகிறது.

மக பேறு உதவித் தொகையினை எளிதாக பெறும் வகையில் தனி வட்டாட்சியர் (சமூக பாதுகா புத்திட்டம்) மூலம் தேவையான சான்றிதழ்களை ஒருமுக படுத்தி வழங்க இத்திட்டத்தின் கீழ் வசதிகள் செய்து தர படும். 60 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் மாதம் ஒன்றுக்கு 1,000 ரூபாய் ஓய்வூதியமாக பெறுவர்.

இந்தத் திட்டத்தின் உறு பினரோ அல்லது அவரை சார்ந்தவரோ இறக்க நேரிட்டால், அந்த குடும்பத்திற்கு ஈமச்சடங்கிற்கான உதவித்தொகை உடனடியாக வழங்க படும்.

வேலூர் மாவட்டத்தில்

இந்த திட்டத்தின்படி, மாநிலம் முழுவதும் டோக்கன்கள் அச்சிடும்பணி போர்க்கால அடி படையில் நடைபெற்று வருகிறது. வேலூர் மாவட்டத்தில் கலெக்டர் நாகராஜன் உத்தரவின் பேரில், 4 லட்சத்து 610 டோக்கன்கள் அச்சடிக்க பட்டு அடையாள அட்டை (டோக்கன்) வழங்கும் பணி நடந்து வருகிறது.

இதில் பள்ளிகொ டா, ஒடுக்கத்தூர் உள்வட்டங்களில் 5,570 பேருக்கு அந்தந்த கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் கொடுக்க பட்டது. மேலும் வாலாஜா, குடியாத்தம், அரக்கோணம் உள்பட அனைத்து தாலுகா அலுவலகங்களில் அடையாள அட்டை கொடுக்கும் பணி நடந்து வருகிறது. இந்த பணிகளை சமூக பாதுகா பு திட்ட தனி தாசில்தார்கள் மற்றும் வருவாய் அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த பணிகளை மாவட்ட அளவில் தனித்துணை கலெக்டர் (சமூகபாதுகா பு திட்டம்) அ ணாதுரை உள்பட வருவாய் அலுவலர்கள் க காணித்து கலெக்டருக்கு அறிக்கையை சமர் பிக்கின்றனர்.

வேலூர் மாவட்டத்தில் 9 தாலுகாக்களான வேலூர் –43,409, வாலாஜா –45,101, காட்பாடி –35,014, குடியாத்தம் –35,592, ஆற்காடு –30,264, அரக்கோணம் –73,486, வாணியம்பாடி 40,305, திரு பத்தூர் –72,025, ஆம்பூர் –25,414 மொத்தம் 4 லட்சத்து 610 பேருக்கு அடையாள அட்டை வழங்க படுகிறது.

**கோபி வேளா  மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில்**
**ரூ.3 3/4 லட்சத்துக்கு வாழை பழங்கள் விற்பனை**

கோபி, செ .19–

கோபி வேளா  மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.3 3/4 லட்சத்துக்கு வாழை பழங்கள் விற்பனை செய்ய பட்டன.

வாழை பழம் விற்பனை

கோபி வேளா  மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் புதன் மற்றும் சனிக்கிழமை அன்று வாழை பழங்கள் ஏலம் மூலம் விற்பனை செய்ய படுகின்றன. அதுபோல் நேற்று முன்தினம் வாழை பழம் ஏலம் நடைபெற்றது.

கோபிசெட்டிபாளையம், பாரியூர், குள்ளம்பாளையம், நாகதேவன்பாளையம், கடுக்காம்பாளையம், பொம்மநாயக்கன்பாளையம், கூகலூர், கள்ளி பட்டி, தூக்கநாயக்கன்பாளையம், கொ  டையம்பாளையம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த 200–க்கும் மேற்பட்ட விவசாயிகள் மொத்தம் 3 ஆயிரத்து 500 தார் வாழை பழங்களை விற்பனைக்காக கொ  டு வந்து இருந்தனர். இதில், கதலி ரக வாழை பழம் ஒரு கிலோ ரூ. 24–க்கும், நேந்திரன் ரகம் ஒரு கிலோ ரூ. 21–க்கும் விலை போனது.

ரூ.33/4 லட்சத்துக்கு விற்பனை

இதேபோல், ஒரு தார் மொந்தன் ரக வாழ பழம் ரூ. 210–க்கும், பூவன் ரூ. 270–க்கும், தேன்வாழை ரூ. 33–க்கும், செவ்வாழை ரூ.580–க்கும், ரஸ்தாளி ரூ. 250–க்கும், பச்சைநாடன் ரூ. 210–க்கும், ரோபஸ்டா ரூ. 220–க்கும் விலை போனது. மொத்தம் ரூ.3 லட்சத்து 75 ஆயிரத்துக்கு வாழை பழங்கள் விற்பனை செய்ய பட்டன.

கோபிசெட்டிபாளையம், பவானி, சத்தியமங்கலம், பெருமாநல்லூர், ஈரோடு, சேலம், திரு பூர், கோவை உள்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் போட்டி போட்டு வாழை பழங்களை வாங்கி சென்றனர்.

வரத்து அதிகரி பு

தற்போது கோபிசெட்டிபாளையம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் வாழை பழ தார்கள் வெட்டும் பணி தொடங்கி உள்ளது. அதனால், கோபி வேளா  மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்துக்கு வாழை பழங்களின் வரத்து

அதிகரித்து உள்ளது. கடந்த வாரத்தை காட்டிலும் இந்த வாரம் 200 தார் வாழை பழங்கள் கூடுதலாக கொ டுவர பட்டு இருந்தது.

கடந்த வாரம் 3 ஆயிரத்து 300 தார் வாழை பழங்கள் விற்பனைக்காக கொ டு வர பட்டு இருந்தது குறி பிடத்தக்கது. இனி ஏலத்துக்கு கொ டு வர படும் வாழை பழங்களின் வரத்து தொடர்ந்து அதிகரிக்கும் என்று விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

தேங்காய்

இதேபோல் கோபி வேளா மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடைபெற்ற தேங்காய் ஏலத்துக்கு 6 ஆயிரம் தேங்காய்கள் கொ டு வர பட்டு இருந்தன. இது அதிகபட்ச விலையாக ரூ. 10–க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ. 6–க்கும், சராசரி விலையாக 7 ரூபாய் 80 காசுக்கும் விற்பனை ஆனது. மொத்தம் ரூ.55 ஆயிரத்துக்கு தேங்காய் விற்பனை செய்ய பட்டது.

---

**தமிழ்நாடு வேளா மை பல்கலைக்கழகம் நடத்தும் விவசாயிகளுக்கான சான்றிதழ் படி புகள்**

தஞ்சாவூர்,செ .19–

தமிழ்நாடு பல்கலைக்கழகம் திறந்தவெளி, தொலைதூரக் கல்வி இயக்ககம் வழியாக விவசாயிகளுக்கு சான்றிதழ் படி புகளை நடத்தி வருகிறது. மேலும், முதல் முறையாக விவசாயிகளுக்காக இளநிலை ப ணைத் தொழில்நுட்பம் என்ற பட்ட படி பை ம் அறிமுகம் செய்துள்ளது.

இது குறித்து தமிழ்நாடு வேளா மை பல்கலைக்கழக தஞ்சாவூர் ம , ர் மேலா மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் பா. சந்திரசேகரன் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் கூறி இரு பதாவது:–

பட்ட படி பு

தமிழக விவசாயிகளுக்கு இளநிலை ப ணைத் தொழில்நுட்பம் (பி.எ .டெக்.) என்ற பட்ட படி பு தமிழில் முதல்முறையாக விவசாயிகளுக்காக வழங்க படுகிறது. விவசாயிகளும் பட்டதாரியாக விளங்கிடவும், அவர்களுடைய தன்னம்பிக்கையை

மேம்படுத்தவும், நவீன வேளா    தொழில்நுட்பங்களை நடைமுறை படுத்தி அதிக விளைச்சல், வருமானம் பெற்றிடும் வகையில் இந்த தொழில்நுட்ப பட்ட படி பு வடிவமைக்க பட்டுள்ளது.

சான்றிதழ் படி புகள்

சான்றிதழ் படி புகள், நவீன கரும்பு சாகுபடித் தொழில்நுட்பங்கள், தோட்டக்கலை பயிர்களுக்கான நாற்றங்கால் தொழில்நுட்பங்களும் பயிர் பெருக்க முறைகளும், காளான் வளர் பு, பழங்கள் மற்றும் காய்கறிகளை  பத படுத்துதல், தரிசு நில மேம்பாடு, தேனீ வளர் பு, திடக்கழிவுகளும் ம   புழு தயாரித்தல் தொழில்நுட்பங்களும், ப    ணைக்கருவிகள் மற்றும் இயந்திரங்களை பழுதுபார்த்தலும் பராமரித்தலும், தென்னை சாகுபடித் தொழில்நுட்பங்கள், பருத்தி சாகுபடி தொழில்நுட்பங்கள், நவீன பாசன முறை மேலா   மை, மூலிகை  பயிர்கள், ரொட்டி மற்றும் சாக்லெட் தயாரிக்கும் தொழில்நுட்பங்கள், மலர் சாகுபடித் தொழில் நுட்பங்கள், பட்டு புழு வளர் புத் தொழில்நுட்பங்கள், அங்கக வேளா   மை, நில எழிலூட்டல் மற்றும் அலங்காரத் தோட்டம் அமைத்தல், வணிக ரீதியிலான தோட்டக்கலை தொழில்நுட்பங்கள் ஆகிய தலை புகளில் நடத்த படுகின்றன.

இந்த படி பிற்கான தகுதிகள் உள்ளிட்ட விவரங்களை இயக்குநர், திறந்த வெளி மற்றும் தொலைதூர கல்வி இயக்ககம், தமிழ்நாடு வேளா   மை  பல்கலைக்கழகம், கோயமுத்தூர்–641 003 என்ற முகவரியிலோ, 0422–6611229 என்ற தொலைபேசி எ    ணிலோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், தமிழ்நாடு வேளா   மை  பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையங்களைத் தொடர்பு கொள்ளலாம். தஞ்சாவூர் ம   ,  ர் மேலா   மை ஆராய்ச்சி நிலைய தொலைபேசி எ 04362–267680. இவ்வாறு அந்த அறிக்கையில் கூற பட்டுள்ளது.

---